உ
சிவமயம்



சாவகச்சேரி - கல்வயல்பதியைச் சார்ந்த

அமரர்

# அன்னப்பிள்ளை சின்னத்துரை

அவர்கள் இறைபதம் நண்ணியமை குறித்த

# நினைவு மலர்

03.05.2006

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



தோற்றம் 12-03-1924

மறைவு 04-04-2006

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுலகு எய்திய

அமரர்

# அன்னப்பிள்ளை சின்னத்துரை

அவர்கள்

## திதிநிர்ணயம்

ஆண்டு பார்த்திபத்தின் அண்டிவரு பங்குனியில்
பூண்டவோர் பூர்வபக்க சட்டி நாள் - மாண்டபுகழ்
அம்மையார் **அன்னப்பிள்ளை** அரனடியைச் சார்ந்தனளே
செம்மையாய் இவ்வுலகில் வாழ்ந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்கள் சின்னத்துரை தம்பதியினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இலக்கணம்

உ

சிவமயம்



யாழ்ப்பாணம் – தென்மராட்சி – சாவகச்சேரி கல்வயல்பதி வாசரும்

சைவவேளாண்குல திலகரும், புராணபடன வித்தகரும் ஆகிய

**அமரர் வேலுப்பிள்ளை சின்னத்துரை அவர்களின்**

வாழ்க்கைத் துணைநலம்

**அமரர் அன்னப்பிள்ளை சின்னத்துரை**

**அவர்கள்**

இறைபதம் நண்ணியமை குறித்து

அன்னவர்தம் குடும்பத்தினரால் வெளியிடப்பெற்ற

# நினைவு மலர்

**03.05.2006**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

ஐயிரண்டு திங்களாய் உந்தியிற் சுமந்து
ஆயிரம் சோதனைகள் கண்டிங்கு வாழ்ந்து
அவனிக்கு விளக்கான அருந்தமிழ்
அன்னையே
ஐங்கரன் பாதங்களில் அமைதி காண்பாய்
எம் வாழ்வின் வசந்தமே
மீண்டும் பிறப்பு உண்டேல்
உனக்குப் பிள்ளைகளாகும்
வரம் ஒன்றையே கேட்போம்
வேதவனத்தன் கழலினை பற்றின்
வாழ்வு மிகுத்து வரும் என்று
வாழ்ந்து காட்டிய உத்தமியே
உன் நினைவுகளின் குறியீடாய் .....
இதுவும் ஒன்று .....
உன் பாதங்களில் அர்ப்பணம்.

03.05.2006 -குடும்பத்தினர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வு வளம்

ஈழத்தின் பக்திச் சிறப்புப் பற்றி பேசுபவர்களுடைய நினைவில் முதலில் ஞாபகத்திற்கு வருவது தென்மராட்சி கல்வயல் பதியாகும். சைவசமய விழுமியங்களை இறுக்கமாகப் பேணுவதற்காக வயல்களாகிய மனங்களை கல்லாக்கிய வைராக்கியதாரிகள் இவர்கள்.

நடுவூருள் பழுத்த நல்ல மரமென இவ்வூருள் வாழ்ந்த சின்னத்துரை ஆசிரியர் வேதவன விநாயகரின் மீளா அடியவர் புராணபடன வித்தகர் எனப் போற்றப்பட்டவர். இவர்தம் வாழ்க்கைத் துணைநலமே இக்கட்டுரையில் நினைவு கூரப்படும் அன்னை அமரர் அன்னப்பிள்ளையாவார்.

அன்னையின் பிறப்பிடம் சங்கத்தானைப் பதியாகும். 'உழுந்தும் உழவே தலை' என்ற கொள்கை படைத்த வேலுப்பிள்ளை சிதம்பரம் தம்பதியர் இவ்வூரில் இயற்றிய இல்லற வாழ்வின் நன்கலங்களாக அன்னப்பிள்ளை, சிவசுப்பிரமணியம் என்ற இரண்டு மக்கட் செல்வங்களை ஈன்றெடுத்து மகிழ்ந்தனர்.

12.03.1924-ல் இவ்மண்ணுலகில் பிறந்த அன்னப்பிள்ளை அழகும், அறிவும், ஆற்றலும் ஒருங்கே அமையப் பெற்றவராகத் திகழ்ந்தார்.

பெண்ணிற் பெருந்தக்களாக விளங்கிய அன்னப்பிள்ளைக்கு ஏற்ற மணாளன் யாரென தந்தையார் எண்ணியகாலை கல்வயற்பதி புராணபடன வித்தகர் சின்னத்துரை (செல்லத்துரை) ஆசிரியரே பொருத்தமானவரென பெரியவர்கள் நிச்சயித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருமனம் கலந்து திருமணம் நிறைவெய்தியது. தம்பதியர் இல்வாழ்வை அறவாழ்வெனக்கருதி ஓம்பினர். தம்வாழ்வின் நன்கலங்களாக ஆறு அருந்தவச் செல்வங்களுக்கு அரவணைத்து மகிழ்ந்தனர். தாம் பெற்றெடுத்த பிள்ளைச் செல்வங்களுக்கு கமலாதேவி, யோகாம்பிகை, சுந்தரவல்லி, இராசலட்சுமி, சிவயோகம், சிவகுமாரன் என நாமகரணம் சூட்டி மகிழ்ந்தனர்.

கணவர் சின்னத்துரை நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் தலைமை உபாத்தியாயராகத் திகழ்ந்தவர் கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் போன்ற புராணங்களைப் படிப்பதிலும் பயன் கூறுவதிலும் வல்லவர். இவரது வெற்றிகளுக்குப் பின்னால் நின்ற சக்தி அன்னப்பிள்ளை ஆவார். அன்னையின் வாழ்விலும் புராணபடனம் முக்கிய இடம்பெறுகிறது. கணவனின் குணப்பண்புடன் ஒன்றும் மனைவியல்லவா? தன் வாணாழில் பெரும்பங்கை புராணம் கேட்டலிலேயே அன்னப்பிள்ளை செலவிட்டார்.

புராணங்கள் காட்டும் அறவாழ்வும் தர்ம சிந்தனையும் இவரிடம் ஆழமாக வேரூன்றியிருந்தது. எனவேதான் “எல்லோரும் ஒற்றுமையாக வாழவேண்டும்.” என்பதை தன் வாழ்வின் தாரக மந்திரமாகக் கொண்டு செயற்பட்டார்.

கணவர் சின்னத்துரை 1996-ல் இவ்வுலக வாழ்வை நீத்தபின்னர் பிறவிப்பிணியில் எவ்வளவு காலம் உழல்வேனோ? என்ற வேதனை இவரிடம் மேலோங்கியது. தனது வேதனையை வேதவனத்தானிடம் வெளிப்படுத்திக் கொள்வார். அன்னையின் பிள்ளைகள் மாத்திரமல்ல மருமக்களும் அன்னை மீது உயிரையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருக்கின்றனர். அன்னையின் சகோதரராகிய சிவசுப்பிரமணியம் (மாவளவு சுப்பிரமணியம்) பூநகரி ப. நோ. கூ. சங்க முகாமையாளராகத் திகழ்ந்தவர். தற்போது அமரத்துவம் அடைந்து விட்ட இவர் சகோதரி மீது உயிரையே வைத்திருந்தார்.

மூத்த புதல்வி கமலாதேவி மீசாலையூர் குலசேகரத்தைக் கரம்பற்றி மீசாலையில் வாழ்ந்து வருகிறார்.

பாசமகள் யோகாம்பிகை அன்னையுடனேயே தன் வாழ்வைக் கழிக்கும் பேறு பெற்றார்.

நேசமகள் சுந்தரவல்லி ஏழாலையூர் ஆனந்தராஜாவைக் கரம்பற்றி கல்வயலில் வாழ்ந்து வருகிறார். இவர் மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயத்தில் இசைப்பணி புரிகிறார்.

ஆசைமகள் ராஜலஷ்சுமி கரவெட்டியூர் சிவராஜாவை மணம்புரிந்து ஜேர்மனியில் வாழ்ந்து வருகிறார். இவர்களின் ஏகபுத்திரியாக அபிராமி திகழ்கிறார்.

பாசமகள் சிவயோகம் கல்வயலூர் யோகநாதனைத் திருமணம் செய்து சசிந்தா, முகுந்தன், கோகுலன் (மாணவர்கள் சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகிய மும்மணிகளை ஈன்றெடுத்துக் கல்வயலில் வாழ்ந்து வருகின்றனர்.

ஒரே புதல்வனாகிய சிவகுமாரன் மறவன்புலவூர் கேதாரகௌரியை கரம்பற்றி தற்போது இலண்டனில் வசிக்கிறார். அபிஷா, மதுஷா என்ற இருவர் இவர்களது செல்வங்களாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரக்குழந்தைகள் யாவரும் நல்ல பிள்ளைகளாகவும், பண்புடைய பிள்ளைகளாகவும் வாழவழி காட்டிய பெருமை அன்னையையே சாரும்.

தமிழிசைப் பாடல்களையும், திருமுறைச் செல்வத்தையும் செவிக்கு உணவாக்குவது அன்னையின் பொழுது போக்காகும். இன்னிசை வேந்தர் பொன் சுந்தரலிங்கத்தின் குரலில் ஒலிக்கும் திருவாசகப் பாடல்களைக் கேட்டாலேயே தூக்கம் கண்களைத்தழுவும் என்ற நிலையில் பக்திநெறி வாழ்வை மேற்கொண்டார்.

எல்லோர்க்கும் அன்னையாய் இனியவாழ்வு வாழ்ந்த அன்னப்பிள்ளை தனது 82-வது வயதை எய்தினார். நண்பியாய், மந்திரியாய், நல்லாசிரியையாய் பலரது வாழ்வைச் செம்மைப்படுத்திய அன்னப்பிள்ளையின் வாழ்வின் ஈறு 04.04.2005 ஆக அமைந்தது.

பார்த்திப வருடம் பங்குனி மாதம் பூர்வபக்க ஷட்டி திதி நாளில் பந்தங்களும் பாசங்களும் கலங்கி மெய்சோர வேதவனத்தான் திருத்தாழ்களை அன்னை பற்றினார். அன்னையின் ஆன்மா சாந்தியடைய கடக்களிற்றின் கருத்துள் இருத்துவாம்.

*மலராக்கம்:-*

**ச. லலீசன்**

ஆசிரியர்,

சைவசமயப் பிரசாரகர்.

**ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி**

**புத்தூர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலியுரை

"கிரியாகான கலாமணி" "வேதாகமஜோதி"
***சிவஸ்ரீ. கி. சோமசுந்தரக்குருக்கள்*** J.P
***மட்டுவில்.***

உலகில் பெண்மைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் அல்லது சமத்துவம் கொடுக்க வேண்டும். என்றெல்லாம் எல்லோரும் பேசிக் கொள்கிறார்கள். ஆனால் பெண்மையின் தத்துவம் முக்கியத்துவம் என்பன என்ன என்பதைப் பற்றி யாரும் சிந்திப்ப தில்லை. வாழ்வில் பெண்ணுக்குச் சரியான இடம் கொடுக்கப் பட்டுத்தான் முன்னோர் வாழ்ந்திருக்கிறார்கள். வாழ்வில் ஓர் ஆணின் வளர்ச்சி, குடும்பத்துவம், என்பவற்றிற்குப் பின்னால் பெண்ணின் கடமை, கட்டுபாடு, முக்கியத்துவம் என்பன முன்னோக்கி நிற்கிறது. வாழ்வில் பெரியார்கள் தங்கள் அறிவுத் திறனை முன்வைத்து வாழ்க்கை நடாத்தும் போது துணை நிற்பவள் பெண். விவாகத்திலிருந்து கணவனின் அன்பு, குழந்தைப்பேறு, கணவனின் தொழில், வருவாய், தெய்வீகக் கடமை, பிதிர்க் கடமை என்பவற்றைக் கணவனுக்கு நினைவுபடுத்தி அந்த வாழ்வென்னும் அரசியலை முதலமைச்சராக நின்று கவனிப்பவள் பெண்ணே. இந்தவகையில் வாழ்ந்து கடமைகளைச் சரிவரச்செய்து சென்ற 04.04.2006 மறைந்தவர். திருமதி அன்னப்பிள்ளை அம்மையார் அவர்கள். கணவர் தமிழ் ஆசிரியர், புராணிகர், விவசாயி, தெய்வபக்தி மிக்கவர், அப்படிப்பட்ட கணவருடன் வாழ்ந்து நற்குழந்தைகளைப் பெற்று வளர்த்து ஆளாக்கி கணவர் மறைந்த பின்பும் பிள்ளைகளுக்குரிய கடமைகளைச் சரிவரச் செய்தவர் இவ்வம்மையார்.

தெய்வீகக்கடமை, பிதிர்க்கடன் என்பவற்றை அந்தந்தச் சமயத்தில் கணவர்க்கு உணர்த்தி அவைகளைச் சரிவர நடாத்தியவர். தாம் பிறந்து வளர்ந்த சங்கத்தானை முருகப்பெருமானை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்குவதோடு புகுந்த வழிக்குல தெய்வமாகிய கல்வயல் வேதவனப்பிள்ளையார் மீது அளவற்ற பக்தி மிக்கவர். அந்தப் பக்தி மேலீட்டினால் தமது பிள்ளைகளை நல்வழிப்படுத்தியவர்.

வேதவனப் பிள்ளையார் கோவிலில் நான் குருக்களாக இருந்த காலத்தில் தாங்கள் செய்கின்ற உபயங்களை மட்டுமல்லாமல் மற்றவர்களின் உபயங்களையும் கவனித்து இப்படிச் செய்யவேண்டும். என்ற அறிவுரைகளை வழங்கி வருபவர் நான் கோவிலில் பூசைக்கு வரும் காலத்தில் நித்திய வழிபடுபவராக அமைந்து பலவிஷயங்களைக் கவனித்துத் தாய்போல எமக்கும் பல அறிவுரைகளை வழங்கியவர். அமரர் சின்னத்துரை ஆசிரியரின் வாழ்வு சிறக்கக் காரணம் இப்பெண்ணரசியே.

அவருடைய மறைவு நினைப்பவர்கட்கு கவலையைக் கொடுத்தாலும், பிறந்தார். வளர்ந்தார், வாழ்ந்தார். கடமைகளைச் சரிவரச் செய்து காலம்வர இறைவனடி சேர்ந்து விட்டார். இது இயற்கை நியதி.

அம்மையாரின் மறைவுகுறித்து கலங்கும் பிள்ளைகளுக்கும் மருமக்களுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும் எமது அநுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவர் ஆன்மா இறை நிழலில் இருக்க எமது மனத்துறையும் அவரது குலதெய்வமாகிய வேதவனப் பிள்ளையார் பாதங்களைப் பணிந்து அமைகின்றேன்.

வாழ்க! வளர்க!!
வணக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

## விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானை
காதலால் கூப்புவர் தம்கை.

## தேவாரம்

படைக்கல மாகவுன்னாமத் தெழுத்தஞ்செ னாவிற் கொண்டேன்
இடைக்கல மல்லேனெழுபிறப் பும்முனக் காட்செய்கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித் தூநீறணிந்துன்
அடைக்கலங் கண்டா யணிதில்லைச் சிற்றம் பலத்தரனே.

## திருவாசகம்

கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி வினை கடிந்த வேதியனைத்
தில்லை நகர் புக்குச் சிற்றம்பலம் மன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதுங்காண் அம்மானாய்.

## திருவிசைப்பா

பவளமால் வரையைப் பனிபடர்ந் தனையதோர்
படரொளி தருதிருநீறுந்
குவளை மாமலர்க் கண்ணியும் கொன்றையுந்
துன்று பொற் குழற்றிருச் சடையுந்
திவன மாளிகை சூழ்தரு தில்லையுட்
திருநடம் புரிகின்ற
தவள வண்ணனை நினைதொறு மென்மனம்
தழல் மெழு கொக்கின்றதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

புரந்தரன் மாலயன் பூசலிட்
டோலமிட் டின்னம் புகலரிதாய்
இரந்தரன் தழைப்பஎன் னுயிராண்ட
கோவினுக் கென்செய வல்ல மென்னும்
கரந்தும் கரவாத கற்பக
னாகிக் கரையில் கருணைக்கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப்
பாங்கர்க்கே பல்லாண்டுகூறுதுமே.

## புராணம்

நன்மை பெருகருள் நெறியே வந்தணைந்த நல்லூரின்
மன்னு திருத் தொண்டனார் வணங்கி மகிழ்ந்தெழும்பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றவர்தம்
சென்னி மிசைப்பாதமலர் சூட்டினான் சிவபெருமான்.

## திருப்புகழ்

வாதினை யடைந்த வேல் விழியர் தங்கள்
மாயம தொழிந்து தெளியேனோ
மாமலர்கள் கொண்டு மாலைகள் புனைந்துன்
மாபதமணிந்து பணியேனோ
ஆதியொடு அந்தம் ஆகிய நலன்கள்
ஆறுமுக னென்று தெளியேனோ
ஆனதனிமந்திர ரூபநிலை கொண்ட
ஆடு மயிலென்ப தறியேனோ
நாத மொடுவிந்து ஆன உடல் கொண்டு
நானில மலர்ந்து திரிவேனோ
நாகமணிகின்ற நாதநிலைகண்டு
நாடியதில் நின்று தொழுகேனோ
சோதி யுணர்கின்ற வாழ்வுசிவமென்ற
சோக மது தந்து எனையாழ்வாய்
சூரர் குலம் வென்று சேனை யொடுசென்று
சோலை மலை நின்ற பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லியல்

சொல் என்பது ஓர் எழுத்தோ ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்களோ ஒன்று சேர்ந்ததொரு கருத்தை முற்றுப் பெறப்புலப்படுத்தி வருவதாகும். இதனை பதம், மொழி, உருபன் என்றும் அழைப்பர்.

உ-ம்:- 1) பூ, கா, மா, தூ, போ, வா, சே, தா, பா (போன்றவை ஓரெழுத்துச் சொற்கள்)

2) நாய், நரி, கோழி

3) அன்பு, பண்பு

4) கரும்பு, இரும்பு

5) புரட்டாதி, கார்த்திகை, படித்தான்

6) படித்தவன், அடித்தவன்

7) உத்தரட்டாதி, மிருகசீரிடம்

8) படிக்கின்றவன், நடிக்கின்றவன்

9) உத்தரட்டாதியான், மிருகசீரிடத்தான்

இத்தகைய சொற்களை இயல்பு பற்றியும், தொழிற்பாடு பற்றியும் இருவகையாகப்பகுத்து நோக்கமுடியும்.

**இயல்பு பற்றிய வகைபீடு**

தமிழில் வழங்கும் சொற்களின் தன்மைகள் கொண்டு அவற்றின் இயல்புகளை வரையறுத்து அவற்றை நான்கு வேறு வகைப்பாட்டில் வகுத்துள்ளனர் இலக்கண காரர்.

1) இயற்சொல்

2) திரிசொல்

3) திசைச் சொல்

4) வடசொல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இயற்சொல்**

கற்றோரும் மற்றோரும் (கல்லாதவரும்) இயல்பாகப் பொருள் அறிந்து வழங்கும் சொற்கள் இயற்சொற்கள் எனப்படும். பெரும்பாலும் வானொலி, தொலைகாட்சி, பத்திரிகைகள் போன்றவற்றில் இயற்சொற்களே பெரிதும் வழங்கிவருவதைக் காணலாம். இதனை பெயர், வினை, இடை, உரி எனவும் பாகுபடுத்தலாம்.

உ-ம்:- பெயரியற் சொற்கள் - மரம், நீர், தீ, காற்று
வினையியற் சொற்கள் - நட, வா, போ, நில்
இடையியற் சொற்கள் - ஆனால், ஆயின், ஆயினும்
உரியியற் சொற்கள் - அன்பு, கருமை, கோபம்

**திரிசொல்**

கற்றோர் செந்நாவில் மட்டும் பயின்றுவரும் சொற்களையே திரிசொல் என்பர். அதாவது மாணவர்கள் ஒரு ஆசிரியனது துணையைக் கொண்டு மட்டுமே பொருளறியக் கூடிய சொற்களையே திரிசொற்கள் என்பர். இதனையும் இயற்சொல் போல் வகைப்படுத்த முடியும்.

உ-ம்:- பெயர்த்திரி சொல் - கிள்ளை, வாரணம், வரை
வினைத்திரி சொல் - செப்பினான், கிளரந்தான், முழங்கினான்
இடைத்திரி சொல் - ஐ, ஓ, உம், ஓடு, தெய்ய
உரித்திரி சொல் - சால, உறு, தவ, நனி கூர்

**வடசொல்**

இந்தியாவின் வடபகுதியிலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்து தமிழ்ழோடு கலந்து தமிழ் போல வழங்கி வரும் சொற்கள்வடமொழிற் சொற்கள் எனப்படும். அதாவது ஆரியமொழிச் சொற்கள் தமிழ் நடைபெற்று வருவது வடசொல் எனப்படும். இது இருவகைப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) தற்சமம்

2) தற்பவம்

**தற்சமம்**

தமிழுக்கும் வடமொழிக்குமான பொது எழுத்துக்களால், தமிழில் விகாரமின்றி வழங்கப்பட்டு வரும் சொற்களைத் தற்சமம் என்பர்.

உ-ம்:- கமலம், குங்குமம், காரணம், விமலம்

**தற்பவம்**

வடமொழிக்கு மாத்திரமே உரித்துடைய சிறப் பெழுத்துக்களாலாகி அல்லது இவ்விரு எழுத்துக்களாலுமாகிய எழுத்துக்கள் விகாரமடைந்து வழங்குகின்ற சொற்கள் தற்பவம் எனப்படும்.

உ-ம்:- அஷ்டமி - அட்டமி
இலஷ்மி - இலக்குமி
புஷ்பம் - புட்பம்
அபிஷேகம் - அபிடேகம்

**திசைச் சொல்**

தமிழ்மொழியோடு கலந்துள்ள பிறமொழிச் சொற்களுள் ஆரிய மொழி தவிர்ந்த ஏனைவெல்லாம் திசைச் சொல் என்ற தொகுதிக்குள் அடக்கப்படும். தமிழகத்தைச் சூழ்ந்துள்ள (12) பன்னிரு நிலங்களிலிலும் இருந்து தமிழுக்கு வந்து தமிழ்போல வழங்கி வருகின்ற சொற்கள் திசைச் சொற்கள் என இலக்கண காரர் வகுத்துரைப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ-ம்:- 1) கிரேக்கமொழி - ஓரை, யவனர், சுருங்கை

2) அரபு மொழி - இலாகா, வசூல், தகவல்

3) பாரசீக மொழி - சிப்பந்தி, முலாம், துப்பாக்கி, சால்வை

4) உருது மொழி - அண்டா, உண்டியல், கப்பி, சந்தா, சாமான், கெடுபிடி, அசல், சிப்பாய், கச்சேரி, பல்லக்கு, பேட்டி, வக்கீல், ரத்து, மாஜி, மனு, மசோதா, பாக்கி, ஆசாமி, அமுல்.

5) தெலுங்கு மொழி - சலவை, விருது, கலப்படம், இடாப்பு, கொலு, சந்தடி, ஒயில், ரவிக்கை, ராணுவம், கம்மல், கொலுசு

6) கன்னட மொழி - சொத்து, அட்டிகை

7) மலையாளம் - கச்சவடம், தளவாடம், கொச்சி

8) மராத்தி மொழி - பட்டாணி, குண்டான், அட்டவணை

9) போர்த்துக்கீசமொழி - அலமாரி, ஏலம், அன்னாசி, பீங்கான், பீப்பாய், கதிரை, கோப்பை, யன்னல், கடுதாசி, சாவி

10) ஒல்லாந்த மொழி - உலாந்தா, தோம்பு, கக்கூசு, சாக்கு, துட்டு

11) பிரான்சிய மொழி - பட்டாளம், குசினி, துருப்பு, லாந்தர், பீரோ

12) ஆங்கில மொழி - ஒட்சிசன், வைரசு, காபன், தொன்,பெற்றோல், வங்கி, கம்பனி, சைக்கிள், சினிமா, பேப்பர், றப்பர், கிலோமீற்றர், அன்ரனா, ஸ்றீரியோ, எயிட்ஸ்

13) சிங்கள மொழி - தோடை, வற்றாளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சொற்களின் தொழிற்பாடு பற்றிய வகையீடு

கருத்தை உணர்த்துகின்ற வகையில் செயற்படும் சொற்கள் தொழிற்பாடு பற்றிய வகையீட்டில் அடங்கும். இதனையும் நாம் நான்கு வகைப்படுத்தி அறியமுடியும்.

1) பெயர்ச் சொற்கள்
2) வினைச் சொற்கள்
3) இடைச் சொற்கள்
4) உரிச் சொற்கள்

### பெயர்ச் சொற்கள்

ஒரு பொருளை நாமறிவதற்கும், நாமறிந்ததைப் பிறர்க்கு அறிவிப்பதற்கும் பயன்படும். சொற்கள் பெயர்ச் சொற்கள் எனப்படும். பெயர்ச் சொற்களின் சிறப்பிலக்கணம் வேற்றுமை ஏற்றல் அதாவது பெயர்ச் சொல்லென்றால் அது நிச்சயமாக கொள்வதன் மூலம் பெயர்ச் சொற்களை இலகுவில் இனங்கண்டு கொள்ளமுடியும்.

### வேற்றுமை

வேற்றுமை என்பதன் நேரடிப்பொருள் வேறுபாடு என்பதாகும். அதாவது ஒரு பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமை எனப்படும். எவ்வாறு வேறுபடுத்துகின்றது எனின் வேற்றுமை உருபுகளைப் பெயர்ச்சொல்லின் பின்னிணைவாக இணைப்பதன் மூலம் வேறுபடுத்துகிறது. வேற்றுமைகள் எட்டு வகையாகச் சொல்லப்படுகின்றன.

### 1) முதலாம் வேற்றுமை

இதற்கு உருபுகள் இல்லை. இதில் பெயர்ச்சொல் எந்தவிதமான விகாரமுமின்றி நிற்பதால் இதன்பொருள் எழுவாய் எனப்படும். அதனால் இவ்வேற்றுமையை எழுவாய் வேற்றுமை என்றும் அழைப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ-ம்:- கண்ணன் எழுந்தான்

வாணி பாடினாள்

முதலாம் வேற்றுமைக்கு உருபுகள் இல்லையாயினும் சொல்லுருபுகள் உள்ளன. ஆனவன், என்பவன், ஆவான், ஆகின்றவன் போன்ற பல்வேறு சொல்லுருபுகள் உள்ளன.

உ-ம்:- கண்ணன் என்பவன் எழுந்தான்

வாணி ஆனவள் பாடினாள்

குமார் ஆவான் வந்தான்

செல்வி ஆகின்றவள் வந்தாள்.

## 2) இரண்டாம் வேற்றுமை

இரண்டாம் வேற்றுமைக்கு உரு "ஐ" ஒன்றே ஆகும். இவ்வுருபு தன்னையேற்ற பெயர்ச் சொல்லைச் செயற்படு பொருளில் மாற்றும் இச்செயப்படு பொருளும் ஆறு வகைப்படும்.

1) ஆக்கல் - வீட்டைக் கட்டினான்
2) அழித்தல் - காட்டை அழித்தான்
3) அடைதல் - கல்லூரியை அடைந்தான்
4) நீத்தல் - இவ்வுலகை நீத்தான்
5) ஒக்கல் - மயிலை ஒத்தான்
6) உடைமை - பொன்னை உடையான்

இரண்டாம் வேற்றுமைக்குச் சொல்லுருபுகள் இல்லை.

## 3) மூன்றாம் வேற்றுமை

மூன்றாம் வேற்றுமையின் உருபுகள் ஆல், ஆன், ஒடு, ஓடு என்பனவாகும். இவ்வுருபுகள் தம்மையேற்ற பெயர்ச்சொல்லை வெவ்வேறு பொருள்களில் வேறுபடுத்தும். அதாவது ஆல், ஆன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருபுகள் கருவி, கருத்தாப் பொருளிலும், ஒடு, ஓடு உருபுகள் உடனிகழ்ச்சிப் பொருளிலும் வேறுபடுத்தும்.

உ-ம்:- கத்தியால் வெட்டினான் - கருவி

வள்ளுவரால் இயற்றப்பட்டது - கருத்தா

தாயொடு மகன் சென்றான் } உடனிகழ்ச்சி

தந்தையோடு மகன் சென்றான் }

மூன்றாம் வேற்றுமைக்குச் சொல்லுருபுகளும் உண்டு. ஆல் ஆன் என்பவற்றுக்குப் பதிலாகக் கொண்டு என்பதும் ஒடு, ஓடு உருபுகளுக்குப் பதிலாக உடன் என்பதும் சொல்லுருபாக அமையும்.

உ-ம்:- கத்தி கொண்டு வெட்டினான்

பெற்றோருடன் பிள்ளை வந்தது

**4) நான்காம் வேற்றுமை**

நான்காம் வேற்றுமையின் உருபு 'கு' ஒன்றே ஆகும். இவ்வுருபு தம்மையேற்ற பெயர்ச் சொல்லை ஏழு வேறு பொருளில் வேறுபடுத்தும்.

உ-ம்:- 1) கோடல் - பூஞ்செடிக்கு நீர் ஊற்றினான்

2) பகை - பாம்புக்கு கீரி

3) நட்பு - இராமனுக்குக் குகன்

4) தகுதி - மாணவர்க்கு அடக்கம்

5) முதற்காரணம் - பானைக்கு மண்

6) நிமித்த காரணம் - கூலிக்கு வேலை

7) முறை - இராமனுக்கு சீதை

நான்காம் வேற்றுமைக்குச் சொல்லுருபுகளும் உள்ளன. பொருட்டு நிமித்தம், ஆக என போன்ற சொல்லுருபுகள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ-ம்:- கூலியின் நிமித்தம் வேலை செய்தான்.

கூலியின் பொருட்டு வேலை செய்தான்

கூலிக்காக வேலை செய்தான்.

கூலிக்கென வேலை செய்தான்.

**ஐந்தாம் வேற்றுமை**

ஐந்தாம் வேற்றுமையின் உருபுகள் இல், இன், என்பவையாகும். இவ்வுருபுகள் தம்மை ஏற்ற பெயர்ச் சொல்லை நான்கு வேறு பொருளில் வேறுபடுத்தும்.

1) நீக்கல் - மலையில் வீழருவி
2) எல்லை - சாவகச்சேரியின் வடக்கு மீசாலை.
3) ஒப்பு -, பாலில் வெளிது கொக்கு
4) ஏது - கற்பில் சிறந்தவள் கண்ணகி

ஐந்தாம் வேற்றுமையின் சொல்லுருபுகளாக இருந்து, இருந்தும், நின்று, நின்றும், என்பன அமையும்.

உ-ம்:- மலையிலிருந்து வீழருவி

மலையிலிருந்தும் வீழருவி

மலையின் நின்று வீழருவி

மலையில் நின்றும் வீழருவி

**ஆறாம் வேற்றுமை**

ஆறாம் வேற்றுமையின் உருபுகள் அது, ஆது, அ, என்பனவாகும். இவற்றுள் அது, ஆது, உருபுகள் ஒருமையையும் அ, உருபு பன்மையையும் உணர்த்தும்

உ-ம்:- எனது புத்தகம்

எனாது புத்தகம்

என புத்தகங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாம் வேற்றுமையின் பொருள் உடமைப் பொருளாகும். இவ்வுடமைப் பொருள் கிழமை எனவும் அழைக்கப்படும். இக்கிழமை தற்கிழமை பிறிதின் கிழமை என இருவகைப்படும்.

தற்கிழமையாவது தனக்கேயுரியது தன்னிலிருந்து வேறுபடுத்த முடியாதது.

உ-ம்:- எனது கை, எனாதுகை, என கைகள்,
எனது தலை, எனது இதயம்

பிறிதின் கிழமையாவது தனக்கேயுரியது தன்னிலிருந்து வேறுபடுத்தக் கூடியது.

உ-ம்:- எனது புத்தகம்
எனாது புத்தகம்
என புத்தகங்கள்

ஆறாம் வேற்றுமையின் சொல்லுருபாக உடைய என்பது அமையும்.

உ-ம்:- என்னுடைய கை
என்னுடைய புத்தகம்

**ஏழாம் வேற்றுமை**

ஏழாம் வேற்றுமையின் உருபுகள் கண், கில், மேல், கீழ், வாய், இடத்து எனப்பலவாகும். இவ்வுருபுகள் தம்மை ஏற்ற பெயர்ச் சொல்லை இடப்பொருளில் வேறுபடுத்தும். இவ்இடப்பொருளும் கிழமை எனப்படும். அக்கிழமையும் தற்கிழமை,பிறிதின் கிழமை என இருவகைப்படும்.

உ-ம்:- மலையில் வீடு
பனையின் கண் காகம்
மேசையின் கீழ் நாய்
} பிறிதின் கிழமை

மணியில் ஒலி
கையின் கண் விரல்
} தற்கிழமை

ஏழாம் வேற்றுமைக்கு உருபே சொல்லுருபாகவும் அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எட்டாம் வேற்றுமை

எட்டாம் வேற்றுமைக்கு உருபுகள் கிடையாது. ஆனால் பெயர்ச்சொல் திரிபடைந்து வருதலால் விளி வேற்றுமை என்பர். பெயர்ச்சொல் திரிபடைதல் பல வகைப்படும்.

உ-ம்:- தம்பி வா

அண்ணா நில்

### வேற்றுமை மயக்கம்

சில வேளைகளில் ஒரு வேற்றுமையின் உருபு இன்னோர் வேற்றுமையின் பொருளோடு சேர்ந்து வருவதுண்டு அதனைப் பொருள் மயக்கம் என்பர். அவ்வாறே ஒரு வேற்றுமையின் உருபு நிற்க வேண்டிய இடத்தில் பிறிதோர் வேற்றுமையின் உருபு நிற்பதுண்டு அத்தகைய சந்தர்ப்பத்தில் அதனை உருபு மயக்கம் என்றழைப்பர்.

உ-ம்:- 1) இலங்கைக்கு வடக்கு இந்தியா

2) ஆலத்தினால் அமிழ்தாக்கிய கோன்

முதலாவது உதாரணத்தில் 'கு' உருபு எல்லைப் பொருளோடு வந்தது. அதனால் அது பொருள் மயக்கம் ஆகும். எனவே இது ஐந்தாம் வேற்றுமையாகும். இரண்டாவது உதாரணத்தில் 'ஐ' உருபு நிற்க வேண்டிய இடத்தில் ஆல் உருபு நின்றது. எனவே அது உருபு மயக்கமாகும். எனவே இது இரண்டாம் வேற்றுமையாகும். இவ்வாறு வேற்றுமை மயக்கம் இடம்பெறும் இடங்களில் அதன் உருபைக் கொண்டு வேற்றுமையை அறிதல் பொருந்தாது. அதன் பொருள் கொண்டே வேற்றுமையை அறிதல் வேண்டும். அதாவது "யாதனுருபிற் சொல்லிற்றாயினும்" பொருள் சென்மருங்கே வேற்றுமை சாரும்" எனக் கூறப்படுகின்றது.

திரு. க. ஈஸ்வரன்
(ஆசிரியர்)
யா/மீசாலை வீரசிங்கம் ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரிகோண கணித சமன்பாடுகள்

1) $\sin\theta \cdot \operatorname{cosec}\theta = 1$

2) $\cos\theta \cdot \sec\theta = 1$

3) $\tan\theta \cdot \cot\theta = 1$

4) $\tan\theta = \dfrac{\sin\theta}{\cos\theta}$

5) $\cot\theta = \dfrac{\cos\theta}{\sin\theta}$

6) $\sin^2\theta + \cos^2\theta = 1$

7) $1 + \tan^2\theta = \sec^2\theta$

8) $1 + \cot^2\theta = \operatorname{cosec}^2\theta$

9) $\sin(A+B) = \sin A \cdot \cos B + \cos A \cdot \sin B$

10) $\cos(A+B) = \cos A \cdot \cos B - \sin A \cdot \sin B$

11) $\tan(A+B) = \dfrac{\tan A + \tan B}{1 - \tan A \cdot \tan B}$

12) $\sin(A-B) = \sin A \cdot \cos B - \cos A \cdot \sin B$

13) $\cos(A-B) = \cos A \cdot \cos B + \sin A \cdot \sin B$

14) $\tan(A-B) = \dfrac{\tan A - \tan B}{1 + \tan A \cdot \tan B}$

15) $2 \sin A \cdot \cos B = \sin(A+B) + \sin(A-B)$

16) $2 \cos A \cdot \sin B = \sin(A+B) - \sin(A-B)$

17) $2 \cos A \cdot \cos B = \cos(A+B) + \cos(A-B)$

18) $2 \sin A \cdot \sin B = \cos(A-B) - \cos(A+B)$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19) $\sin C + \sin D = 2 \sin \frac{(C+D)}{2} . \cos \frac{(C-D)}{2}$

20) $\sin C - \sin D = 2 \cos \frac{(C+D)}{2} . \sin \frac{(C-D)}{2}$

21) $\cos C + \cos D = 2 \cos \frac{(C+D)}{2} . \cos \frac{(C-D)}{2}$

22) $\cos C - \cos D = -2 \sin \frac{(C+D)}{2} . \sin \frac{(C-D)}{2}$

$= 2 \sin \frac{(C+D)}{2} . \sin \frac{(D-C)}{2}$

23) $\sin 2\theta = 2 \sin\theta \ . \cos\theta$

24) $\sin 2\theta = \frac{2 \tan\theta}{1 + \tan^2\theta}$

25) $\cos 2\theta = \cos^2\theta - \sin^2\theta$

26) $\cos 2\theta = 2\cos^2\theta - 1$

27) $\cos 2\theta = 1 - 2 \sin 2\theta$

28) $\cos 2\theta = \frac{1 - \tan^2\theta}{1 + \tan^2\theta}$

29) $\tan 2\theta = \frac{2 \tan\theta}{1 - \tan^2\theta}$

30) $\sin 3\theta = 3 \sin\theta - 4 \sin^3\theta$

31) $\cos 3\theta = 4 \cos^3\theta - 3\cos\theta$


32) $\tan 3\theta = \frac{3 \tan\theta - \tan^3\theta}{1 - 3 \tan^2\theta}$

**யோ. முகுந்தன்**
(மாணவர்)
சாவ. இந்துக் கல்லூரி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நன்றி நவிலல்

எங்கள் குடும்ப விளக்காகவும் வழிகாட்டியாகவும் வாழ்ந்து 04.04.2006 அன்று இறைபதம் அடைந்த

**அமரர் சின்னத்துரை அன்னப்பிள்ளை அவர்களின்**

மறைவுச் செய்தி கேட்டு ஓடோடிவந்து பலவழிகளிலும் உதவி செய்தவர்களுக்கும் மரணச் சடங்கில் கலந்து கொண்டோருக்கும், தொலைபேசி, தந்திகள் மூலம் அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், நோயுற்ற வேளையில் வைத்தியம் செய்த மருத்துவருக்கும், அஞ்சலிப்பிரசுரங்கள் வெளியிட்டும், மலர் வளையங்கள் செலுத்தியும் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் இன்றைய ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் கலந்து கொண்டவர்களுக்கும், கிரியைகளைத் திறம்பட நடத்திய குருமார்களுக்கும் மற்றும், இந்நினைவு மலரை உருவாக்க பலவழிகளிலும் உதவிபுரிந்த திரு S. லலீசன் ஆசிரியர் அவர்களுக்கும், தமிழ் ஆசிரியர் க. க ஈஸ்வரன் அவர்களுக்கும், திறம்பட இந்நூலை வடிவமைத்துத் தந்த திருக்கணித அச்சகத்தாருக்கும் எமது மனமார்ந்த நன்றியை இருகரம்கூப்பி தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்**

திருக்கணித பதிப்பகம் - 114, டச்சு வீதி, சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்
அது வேறொருவருடையதாகும்.

"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்."

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்.**



திருக்கணி...

SIVARAM...
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org